ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2352/07 - 2023 ඔක්තෝබර් මස 03 වැනි අඟහරුවාදා - 2023.10.03

*2352/07 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: GODS/LND/05/ACQ/RDA,
GODS/LND/05/SUR/2022/8.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/5/2021/HW/115.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், கொடக்கவெல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 251C, ரக்வானை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள ரக்வானை கிராமத்தில் அமைந்துள்ள இரத்தினபுரி மாவட்ட நில அளவையாளர் அதிபதி சார்பாக நில அளவையாளர் நாயகத்தினால் 2023.07.19 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட வரைபட இல. இ.கி.வ. 699, பிற்சேர்க்கை இல. 21, தாள் இல. 21 கொண்டதுமான 0.0182 ஹெக்டயார் விஸ்தீரண முடைய 1930 தொடக்கம் 1932 வரையான (03 துண்டுகள்) காணித் துண்டுகள் விஸ்தரிப்பதற்காக எடுக்கப்படுகின்றது :

*01.* **துண்டு இல.** *1930*
காணியின் பெயர் : எலட்டன் வத்தை; விபரம் : தோட்டம், 10-15 வயதுடைய கலப்புப் பயிர்ச்செய்கை உள்ளது; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : பீ.கே. சமிந்த லக்சிரி, தெனியாய வீதி, ரக்வானை, காணி எடுத்தலுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை; விஸ்தீரணம் : 0.0007 ஹெக்டயார்.

*02.* **துண்டு இல.** *1931*
காணியின் பெயர் : எலட்டன் வத்தை; விபரம் : தோட்டம், 10-15 வயதுடைய கலப்புப் பயிர்ச்செய்கை உள்ளது; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : வில்பட் முணசிங்ஹ, தெனியாய வீதி, ரக்வானை, காணி எடுத்தலுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை; விஸ்தீரணம் : 0.0140 ஹெக்டயார்.

*03.* **துண்டு இல.** *1932*
காணியின் பெயர்: - ; விபரம் : வீதி; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: கண்டுபிடிக்க முடியாது, காணி எடுத்தலுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை; விஸ்தீரணம் : 0.0035 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கொடக்கவெல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஜீ. எல். டப்ளிவ். ஏ. பிரதீபா,
பிரதேச செயலாளர்,
கொடக்கவெல.

பிரதேச செயலகம்,
கொடக்கவெல.
2023, செத்தெம்பர் 20.

EOG 10 - 0007

---

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: KDS/HAR/4/2/1/55.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/18/2019/WS/530.

கண்டி வடக்கு - பாத்ததும்பரை ஒருங்கிணைந்த நீர் விநியோகத் திட்டத்தின் குருந்துகஹமட இஹல நீர் விநியோகத் தாங்கியை நிர்மாணிப்பதற்காக காணித்துண்டு ஒன்றை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்** :

மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவில், குளுகம்மன சியபத்துவ (பற்று) சிறிய பிரிவில், யஹலதென்ன கந்த கிராமத்திலமைந்த, கண்டி மாவட்ட சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 320504 இற்கு உரிய கடத்திரல் வரைபடத்தின் வலய இல. 01 இல் பத்திரிகை இல. 01 இல் காணித்துண்டு இல. 01 இனால் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க் காணப்படும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டின் விபரங்கள் :

01. **துண்டு இல. 01**

காணியின் பெயர் : யஹலதென்னவத்த; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : காணி மறுசீரமைப்பு ஆணைக் குழு; விஸ்தீரணம் : 0.0643 ஹெக்டயார்.

வடக்கு : வீதி (பிரதேச சபை) மற்றும் வீதி; கிழக்கு : வீதி; தெற்கு : காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் யஹலதென்ன வத்த; மேற்கு : காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் யஹலதென்ன வத்த மற்றும் வீதி (பிரதேச சபை).

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மொஹான் தர்மதாச,
பிரதேச செயலாளர்,
ஹாரிஸ்பத்துவ.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
ஹாரிஸ்பத்துவ,
நுகவெல,
2023, செத்தெம்பர் 27.

EOG 10 - 0008

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.